# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!



**05.02.2026 நிகழ்வுகள்**

### 1. தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்தும் தொழில்கள்

**ஆ. ராசா**



தமிழ்நாட்டு மலைப் பகுதிகளில் உணவு பதப் படுத்தும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு ஒன்றிய அரசிடம் உள்ள திட்டங்கள் குறித்து திமுக துணை பொதுச் செயலாளர் ஆ. இராசா கேள்வி எழுப்பியுள்ளார். தமிழ்நாட்டில் அமைக்கப்படும் உணவு பதப்படுத்தும் பூங்காக்கள் மற்றும் தொழிற்சாலைகள் மேம்பாட்டில், பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனா (PMKSY), உணவு பதப்படுத்தும் தொழிலுக்கான உற்பத்தி சார்ந்த ஊக்கத் தொகை (PLI) திட்டம் மற்றும் பிரதான் மந்திரி சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PMFME) ஆகியவற்றில் அரசாங்கம் வகிக்கும் பங்கின் விவரங்கள் மற்றும் இதன்கீழ் தனியார் தொழில்முனைவோருக்கு வழங்கப்பட்ட நிதி உதவியின் விவரங்கள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 2. மண்டல வாரியாக உச்சநீதி மன்றத்தின் கிளைகள் அமைக்கப்படுமா?

**பி.வில்சன்**



உச்ச நீதிமன்றத்தின் மண்டலக் கிளைகளை அமைப்பதற்கான சாத்தியங்களை ஆய்வு செய்வதற்கு இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் திமுக எம்.பியும் வழக்கறிஞருமான பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

உயர் நீதித்துறையில் நீதிபதிகள் நியமனத்தில் சமூகப் பன்முகத்தன்மை மற்றும் சமூகப் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? 2021 ஆம் ஆண்டு முதல் உயர் நீதி மன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் நியமிக்கப்பட்ட பட்டியல் சாதி, பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பொதுப் பிரிவு, பெண்கள் மற்றும் சிறுபான்மை நீதிபதிகளின் எண்ணிக்கை என்ன? 01.02.2026 நிலவரப்படி உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதி மன்றங்களில் உள்ள நீதிபதி பணியிடங்களின் காலியிடங்கள் எவ்வளவு?

### 3. தேசிய நெடுஞ்சாலை தாமதத்தினால் மோசமாக பாதிக்கப்படுகிறது அரக்கோணம்- காஞ்சிபுரம் சாலை

**க.செல்வம்**




பெங்களூரு மற்றும் சென்னையை இணைக்கும் நான்கு வழி பசுமைச்சாலையின் பெரும்பாலான பகுதிகள் நிறைவடையும் தருவாயில் இருந்தாலும் அதில் அரக்கோணம்-காஞ்சிபுரம் இடையேயான 25.5 கி.மீட்டரில் சுமார் 11 கி.மீ மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது என்றும் இந்த தாமதத்திற்கான காரணம் என்ன என காஞ்சிபுரம் மக்களவை திமுக உறுப்பினர் செல்வம் நாடாளுமன்றத்தில் கேட்டுள்ளார். இந்த தாமதத்தின் காரணமாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசல் மற்றும் பொருளாதார சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது.

மேலும் அரக்கோணம்-காஞ்சிபுரம் பிரிவில் ரயில்வே மேம்பாலங்கள், நிலம் கையகப்படுத்துதல் அல்லது நிறுவனங்களுக்கு இடையேயான அனுமதிகள் தொடர்பான சிக்கல்கள் உள்ளிட்டவை காரணங்களாக அரசு சொன்னால் அது ஏற்புடையதல்ல என்றும் மீதமுள்ள பணிகளை விரைவாக முடித்து விரைவுச் சாலையை முழுமையாக இயக்குவதை உறுதி செய்வதற்கு ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

### 4. நீதித்துறை தரநிலைகள் நிர்ணயிக்கும் மசோதாவின் நிலை என்ன?

**டாக்டர் கனிமொழி சோமு**



நீதித்துறை தரநிலைகள் மற்றும் பொறுப்பேற்கும் மசோதாவை நாடாளுமன்றத்தில் மீண்டும் அறிமுகப்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா என்றும் அதை அறிமுகப்படுத்துவதற்காக முன்மொழி யப்பட்ட காலக்கெடு என்ன என்றும் நாடாளுமன்றத்தில் திமுக மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பினார்.

### 5. என்.டி.பி.சி விரிவாக்கம் பற்றி உறுதியான செய்திகளை வெளியிடுக!

**டி.எம்.செல்வகணபதி**



தேசிய அனல் மின் கழகம் (என்.டி.பி.சி) நாட்டின் பல்வேறு இடங்களில் சுமார் 30 ஜிகாவாட் திறன் கொண்ட சொந்த அணுசக்தி திட்டங்களை அமைப்பது குறித்து பரிசீலித்து வருவது குறித்து திமுக சேலம் மக்களவை உறுப்பினர் செல்வகணபதி கேள்வி எழுப்பியுள்ளார். 2047-ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகாவாட் அணுசக்தி திறனைப் பெறுவதென அரசாங்கம்முடிவெடுத்திருப்பதன் காரணம் என்ன? என்.டி.பி.சி தொழில்நுட்பம் மற்றும் எரிபொருள் துறையில் பன்னாட்டு கூட்டுமுயற்சிகளை பெற விளைகிறதா? என்.டி.பி.சி 2032-ஆம் ஆண்டிற்கு 2 ஜிகாவாட் அணுசக்தி திறனை இலக்காகக் கொண்டுள்ளது பற்றி மேலும் தகவல்களை அளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்..

### 6. சிறு நிறுவனங்களுக்கான 25 லட்சம் கோடி கடன் பற்றாக் குறையை தீர்க்க நடவடிக்கை என்ன?

**அருண் நேரு**



2024-25 மற்றும் 2025-26 நிதியாண்டு களில் தங்கள் பதிவை ரத்து செய்த அல்லது செயல்பாடுகளை நிறுத்திய பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (MSME) மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்றும் பல கடன் திட்டங்கள் இருந்தபோதிலும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனத் துறைக்கான கடன் பற்றாக்குறை (28 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது) அதிகரித்து வருவது ஏன் என கேட்டும் திமுக பெரம்பலூர் மக்களவை தொகுதி உறுப்பினர் அருண் நேரு கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் அவர் கேட்டுள்ளதாவது:

நடப்பு நிதியாண்டில் செயல்படாத சொத்துக்களாக (NPAs) மாறியுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனக் கடன்களின் சதவீதம் எவ்வளவு? அவசரகால கடன் உத்தரவாதத் திட்டம் (ECLGS) சிறு நிறுவனங்களை நிரந்தரமாக மூடும் நிலையிலிருந்து காப்பாற்றத் தவறியதற்கான காரணங்கள் யாவை? குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை மோசடி கடன் வழங்கும் செயலிகளிடமிருந்து பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

### 7. நீதிபதிகளுக்கு எதிரான புகார்களை விசாரிக்க நடவடிக்கை!

**டாக்டர் கனிமொழி சோமு**

இந்தியத் தலைமை நீதிபதி மற்றும் உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளால் பெறப்பட்ட நீதிபதிகளுக்கு எதிரான புகார்களை விசாரிக்கும் நடைமுறைகள் குறித்து திமுக எம்.பி. டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த ஐந்து ஆண்டுகளில் விசாரித்து முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் அடையாளங்களை வெளியிடாமல் முடித்து வைக்கப்பட்ட அல்லது அறிவுரை வழங்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 8. காலநிலை உச்சி மாநாடு(COP30) - முடிவுகள் என்ன?

**எஸ்.ஆர். சிவலிங்கம்**



பிரேசிலின் பெலெம் நகரில் நடைபெற்ற COP30 உச்சி மாநாட்டில் இந்திய அரசு பங்கேற்று, காலநிலை மாற்ற தடுப்பு நடவடிக்கைகளை விட நாம் பருவநிலை மாற்றங்களுக்கேற்ப தகவமைத்துகொள்வதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியதா என திமுக மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார். வளர்ந்த நாடுகளிடமிருந்து இதற்கான நிதிப் பாய்ச்சலை மும்மடங்காக அதிகரிக்க வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கை மற்றும் பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிரிவு 9.1 கடமைகள் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு ஆகியவற்றின் விவரங்கள் யாவை? COP30 மாநாட்டில் இந்தியாவின் சர்வதேச பருவநிலை நிதி கோரிக்கைகளுக்கும், 202324 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு தேசிய பருவநிலை மாற்றத் தகவமைப்பு நிதியுதவி நிறுத்தப்பட்ட தற்கும் இடையே உள்ள முரண்பாடுகளை அரசாங்கம் மதிப்பிட்டுள்ளதா? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 9. தொழிலாளர் சட்டத் தொகுப்பு வரைவிற்கு மக்களின் கருத்துகளை பெற நடவடிக்கை என்ன?

**ராஜாத்தி சல்மா**



தொழிலாளர் சட்டத் தொகுப்பு விதிகள் குறித்த வரைவுகளின்மீது அரசாங்கம் பொதுமக்களின் கருத்துக்களை பெறுகிறதா? என்று திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா நாடாளுமன்றத்தில் கேட்டுள்ளார். மொத்தமுள்ள நான்கு சட்டத் தொகுப்புகளையும் ஒரே நேரத்தில் வெளியிட்டதற்கான காரணங்கள் என்ன? கருத்துக்களைச் சமர்ப்பிக்க அதிகபட்சம் நாற்பத்தைந்து நாட்கள் மட்டுமே அவகாசம் வழங்கப்பட்டதால், தொழிலாளர்களுக்கும் மற்ற பங்குதாரர்களுக்கும் அனைத்து வரைவுகளுக்கும் திறம்படப் பதிலளிக்க மிகக் குறைந்த நேரமே உள்ளதை கருத்தில் கொள்ளாதது ஏன்? காலக்கெடுவை நீட்டிக்கவும், பரவலாகப் பரப்புவதற்கும், அட்டவணைப்படுத்தப்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்புகளை வழங்குவதற்கும் கோரி அமைச்சகத்திற்கு வந்த மனுக்கள் மீதான நடவடிக்கை என்ன? ஒரு திறமையான கலந்தாய்வு செயல்முறைக்கு போதுமான நேரத்தை வழங்கும் வகையில், கலந்தாய்வை மேலும் நாற்பத்தைந்து நாட்களுக்கு நீட்டிக்கஅமைச்சகம்திட்டமிட்டுள்ளதா? எனும் பல்வேறு கேள்விகளையும் அவர் இணைத்துள்ளார்.

### 10. காதிப்பொருட்களுக்கான இணைய விநியோக வசதி?

**ஆ. மணி**




கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ்நாட்டில் உள்ள காதி மற்றும் கிராமத் தொழில் நிறுவனங்களின் செயல்பாடுகளை, குறிப்பாக உற்பத்தி, விற்பனை மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசாங்கம் ஆய்வு செய்துள்ளதா என தர்மபுரி எம்.பி. ஆ.மணி நாடாளுமன்றத்தில் பின்வரும் கேள்வி எழுப்பியுள்ளார்:

மாநிலத்தில் உள்ள காதி நிறுவனங்கள், பதிவுசெய்யப்பட்ட கைவினைஞர்கள் மற்றும் செயல்படும் அலகுகளின் எண்ணிக்கை மற்றும் உள்கட்டமைப்பை ஊக்குவிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? விளிம்பு நிதி மானியம், சந்தைப்படுத்துதலில் உதவி, மற்றும் மூலப்பொருள் கிடைப்பதிலுள்ள தாமதங்களை சரி செய்யும் முயற்சி போன்றவற்றால் தொழிலாளர்கள் கண்ட பயன்கள் என்ன? அதற்காக பயன்படுத்தப் பட்ட நிதி எவ்வளவு? கைவினைஞர்களின் வருமானத்தை மேம்படுத்துவதற்காக, சந்தைத் தொடர்புகளை வலுப்படுத்தவும், பிராண்ட் விளம்பரத்தை மேற்கொள்ளவும் மற்றும் காதிப் பொருட்களை மின் வணிகத் தளங்களுடன் ஒருங்கிணைக்கவும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை?

### 11. கள்ளக்குறிச்சியில் உணவு பதப்படுத்துதல் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துக!

**தே.மலையரசன்**




கள்ளக்குறிச்சி தொகுதியில் குளிர் பதனக் கிடங்குகள், ஒருங்கிணைந்த விநியோகச் சங்கிலிகள் மற்றும் உணவு பதப்படுத்தும்அலகுகள்போன்றஉள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என நாடாளுமன்றத்தில் திமுக எம்.பி. மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார். அத்துடன் பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனா, மெகா உணவுப் பூங்காக்கள் மற்றும் குளிர்பதனச் சங்கிலி கூறுகள் போன்ற முக்கியத் திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட, நடைபெற்று வரும் மற்றும் முடிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் யாவை? தமிழ்நாட்டின் வேளாண்காலநிலைத் திறனைச் சிறப்பாகக் கருத்தில் கொண்டு, உள்நாட்டு, பாரம்பரிய மற்றும் மண்டல வாரியாக உணவுப் பொருட்களை ஊக்குவிப்பது உட்பட, உணவு பதப்படுத்துதல் துறைக்குள் பன்முகத்தன்மையை மேம்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள முன்முயற்சிகள் யாவை? சர்வதேச சந்தைகளில் இந்திய உணவுப் பொருட்களின் போட்டித்தன்மையை மேம்படுத்த அரசாங்கம் முன்மொழியும் திட்டங்கள் யாவை? ஏற்றுமதி சார்ந்த உள்கட்டமைப்பு, தரப் பரிசோதனை வசதிகள் மற்றும் தளவாடங்களை வலுப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்..



வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழு கூட்டத்தில் கழக பொதுச் செயலாளர், நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்டச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், தொகுதி பொறுப்பாளர்கள் குறிஞ்சி சிவா, மதுசூதனன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# வேலூர் தெற்கு மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அறிவிப்பு!



வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி அவர்கள் தலைமையில் இன்று (07.02.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிபிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே வேலூர் மாவட்ட தி.மு.க.விற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் மற்றும் மாநில அணிகளின் துணை செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: 1. பிப்ரவரி 14 அன்று திருப்பத்தூரில் BLA - 2, BLC மற்றும் BDA ஆகியோர் பங்குபெறும் பயிற்சி மாநாட்டில் கலந்துகொள்வது.

2.மாவட்டத்திற்குட்பட்ட 3 சட்டமன்றத் தொகுதிகளில் 'தமிழ்நாடு தலைகுனியாது' தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடத்துவது.

3. கழக ஆக்கப்பணிகள்.

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.**
செயலாளர்
வேலூர் தெற்கு மாவட்ட திமுக

## ஒன்றிய அரசு – கடந்த 4 ஆண்டுகளில்

# தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைப் பணிகளுக்கு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, பிப்.7-

கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை பணிகள் விரைந்து முடிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.



அது வருமாறு:-

தமிழ்நாடு மாநிலத்தில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களையும் விரைந்து முடிக்க ஒன்றிய அரசு போதுமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

தமிழ்நாட்டில், குறிப்பாக வேலூர் மக்களவைத் தொகுதியில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, கடந்த நான்கு ஆண்டுகளில், ஆண்டு வாரியாக, அனுமதிக்கப்பட்ட, வழங்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்தத் தொகை விவரம் தருக?

சென்னை, பெங்களூரு மற்றும் வேலூரை இணைக்கும் NH-40 வழியாக அணுகல்-கட்டுப்படுத்தப்பட்ட நெடுஞ்சாலைக்கான 1,338 கோடி நெடுஞ்சாலைத் திட்டம் விரைவுபடுத்த ஒன்றிய அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகள் யாவை?

இதற்கு ஒன்றிய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் நிதின் ஜெய்ராம் கட்கரி எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:-

இன்றுவரை தமிழ்நாடு மாநிலத்தில் நடைபெற்று வரும் தேசிய நெடுஞ்சாலை (NH) திட்டங்களின் விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. அதன்படி தற்போது தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு தேசிய நெடுஞ்சாலைகளில் நான்கு வழிப்பாதை அமைக்க 29 பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ் நாட்டில் பல்வேறு தேசிய நெடுஞ்சாலை பணிகளுக்கான பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் செலவு விவரங்கள் கீழ்வருமாறு:-

2022-23 ஆண்டு ரூ.8094 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.7412 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. வேலூர் மக்களவைத் தொகுதியில் மட்டும் ரூ.134 கோடி செலவு செய்யப்பட்டது.

2023-24 ஆண்டு ரூ.12009 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.8150 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. வேலூர் மக்களவைத் தொகுதியில் மட்டும் ரூ.135 கோடி செலவு செய்யப்பட்டது.

2024-25 ஆண்டு ரூ.14242 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.6572 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. வேலூர் மக்களவைத் தொகுதியில் மட்டும் ரூ.82 கோடி செலவு செய்யப்பட்டது.

2025-26 ஆண்டு (27.01.2026 வரை) ரூ.14517 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.5472 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. வேலூர் மக்களவைத் தொகுதியில் மட்டும் ரூ.45 கோடி செலவு செய்யப்பட்டது.

27.01.2026 வரை மொத்தம் ரூ.48862 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ. 27606 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. வேலூர் மக்களவைத் தொகுதியில் ரூ.396 கோடி செலவு செய்யப்பட்டது.

தேசிய நெடுஞ்சாலை (NH) திட்டங்களை செயல்படுத்தும் முகமைகள், மாநில அரசுகள், ஒப்பந்ததாரர்கள்/டெவலப்பர்களுடன் நெருக்கமான ஒருங்கிணைப்புடன் அரசாங்கம் தீவிரமாக கண்காணிக்கிறது. பிரச்னைகளைத் தீர்க்கவும், முன்னேற்றத்தை விரைவு படுத்தவும் பல்வேறு நிலைகளில் அவ்வப்போது ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. கூடுதலாக, திட்ட தாமதங்களைத் தவிர்க்க அல்லது குறைக்க ஒன்றிய அரசாங்கம் பல முயற்சிகளை எடுத்துள்ளது.

வாலாஜாப்பேட்டை/ராணிப்பேட்டையில் இருந்து தமிழ்நாடு/ஆந்திரப் பிரதேசம் என்ஹெச்-40ன் தமிழ்நாடு/ஆந்திரப் பிரதேச எல்லை வரையிலான 28.02 கிமீ நீளத்திற்கு ரூ.1,338.14 கோடி செலவில் நடைபாதை விரிவுகள் கூடிய 4-வழிப்பாதையின் அணுகல் கட்டுப்பாட்டு நெடுஞ்சாலையின் பணி 24.01.2025 அன்று ஹைபிரியில் (அன்று) 24.01.2025 அன்று வழங்கப்பட்டது. திட்டத்திற்கான நியமிக்கப்பட்ட தேதி 30.09.2025 அன்று அறிவிக்கப்பட்டு 29.09.2027 அன்று முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது. மொத்தமுள்ள 28.02 கி.மீ. களில், 25.52 கி.மீ (91%) க்கான வில்லங்கம் இல்லாத நிலம் சலுகையாளருக்குக் கிடைத்துள்ளது. மீதமுள்ள 2.50 கி.மீ., நீளத்திற்கு இழப்பீடு வழங்கும் பணி நடந்து வருகிறது. வேலையில் முன்னேற்றம் உள்ளது. இதில் நிலம் கையகப்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் அனுமதிகள், ரயில்வே ரோடு ஓவர் பிரிட்ஜ்கள்/ரோடு அண்டர் பிரிட்ஜ்களின் (ROBs/RUBs) பொது ஏற்பாடு வரைபடங்களுக்கு (GAD) ஆன்லைன் ஒப்புதல் ஆகிய தொடர் பணிகள் அனைத்தும் வழக்கமான அடிப்படையில் கண்காணிக்கப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.



தி.மு.கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. அவர்களை சென்னை – அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து 12.2.2026 அன்று அகில இந்திய அளவில் நடைபெற உள்ள பொது வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்வது சம்மந்தமாக அனைத்து தொழிற்சங்க முன்னணியினருடன் சந்திப்பு நடைபெற்றது. இந்த ஆலோசனையில் ஒன்றிய அரசின் புதிய தொழிலாளர் சட்டத்திற்கு எதிராகவும், விவசாய சட்டங்களுக்கு எதிராகவும், மற்றும் இதர பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதில் கி.நடராஜன் (தொ.மு.ச.) கோ.சி.வள்ளுவன் (தொ.மு.ச.), ம.இராதாகிருஷ்ணன் (ஏ.ஐ.டி.யு.சி.) மு.சுப்ரமணியன் (எச்.எம்.எஸ்.) எம்.சுப்ரமணியப்பிள்ளை (எச்.எம்.எஸ்.) எஸ்.கண்ணன் (சி.ஐ.டி.யு.) ஈ.சடையாண்டி (ஏ.ஐ.யு.டி.யு.சி.) க.பேரறிவாளன், (எல்.எல்.எப்.) சொ.ராணியப்பன் (ஏ.ஐ.சி.சி.டி.யு) அ.சேக்கிழார் (யு.டி.யு.சி) மேரி லில்லி பாய் (ஐக்கிய விவசாயிகள் சங்கம்) ஆகியோர் பங்கேற்றனர்.